DIOCESE OF TIRUNELVELI

# BETHESDA C.S.I. TAMIL CHURCH

PUNE

# பெதஸ்தா பேசுகிறது

## GOD'S PROMISE FOR THIS MONTH

*உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! - சங்கீதம் 31:19*

## MESSAGE FOR THE MONTH

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே**

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்!

கிறிஸ்தவ நாட்காட்டியில் ஆண்டுதோறும் முதலிடம் பெறுவது லெத்து காலமாகும். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நம் அனைவரும் ஆவிக்குரிய வாழ்வில் புத்துணர்ச்சிமைப் பெற்றுக் கொள்ளும் காலம் என்று சொன்னால் மிகப் பொருத்தமாகும். இந்த லெந்து நாட்கள் அதிகமாக ஜெபம், வேதம் வாசிப்பு ஆகியவற்றை அதிகப்படுத்துங்கள்.

அன்பானவர்களே இந்நாட்களில் நாம் யார்? நமக்குரிய அழைப்பு என்ன? சமுதாயத்தில் நமக்குக் கொடுக்கப்படும் மதிப்பு என்ன? கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் நமது மூலம் நமது ஆண்டவரின் திருநாமம் மகிமை அடைகின்றதா? அல்லது அழிக்கப்படுகின்றதா? நாம் நமக்குரிய அழைப்பை மறந்து வாழ்கின்றோமா? சமுதாயம் நம்மில் எதிர்பார்க்கும் உயர்ந்த பண்புள்ளவர்களாக நாம் காணப்படுகின்றோமா? என்று சிந்தித்து பார்க்க இந்நாட்களில் நாம் அழைக்கப்படுகின்றோம்.

"கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்." (மத். 6 : 22)

சரீரத்தின் அவயவங்களில் கண் மிகவும் முக்கியமானது கண்ணானது சரீரத்தின் விளக்காக இருக்கிறது. கண்ணில் ஒளி இல்லாமல் போனால் எங்கும் இருள் சூழ்ந்த நிலைமையிலேயே ஒரு மனிதன் காணப்படுவான். நாம் சரியான பாதையில் செல்ல கண் நமக்குப் பாதை காட்டுகிறது. நமக்கு முன்பாக இருக்கும் ஆபத்தைக் கண்டு விலகிச் செல்ல கண் பார்வை நமக்கு மிகவும் அவசியம். அதே போன்று நமது ஆன்மீக வாழ்விலும் தெளிவான பார்வை மிகவும் முக்கியமான தாகையால், சாத்தானானவன் இந்தப் பார்வையைக் குருடாக்கிப்போட அல்லது தெளிவற்றதாக்கிவிட தீவிரமாய் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றான். ஆகவே தான் நமது ஆண்டவர் கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது என்றும், உன் கண் தெளிவாய் இருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும் என்றும் போதனை செய்தார். அத்துடன் உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும். என்ற எச்சரிப்பின் செய்தியையும் கொடுத்தார்.

சாத்தானானவன் தீவிரமாய் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இக்காலகட்டத்தில் நமது ஆவிக்குரிய பார்வை எத்தன்மையாயிருக்கிறது என்று சீர்தூக்கிப் பார்ப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. வேதம் காட்டும் வெளிச்சத்தின் மூலம் நம்முடைய குறைகளை தேவ ஆவியானவரின் உதவியுடன் சீர்ப்படுத்திக் கொள்ளவும் அழைக்கப்படுகின்றோம். காலம் கடந்திடும் முன்னர், ஈடு செய்ய முடியாத இழப்பை நாம் சந்திக்கும் முன்னர், கர்த்தர் நம்மைச் சீர்ப்படுத்த நம்மை அவர் கரங்களில் அர்ப்பணிப்போம்.

கிறிஸ்துவின் பணியில்

**REV. V.SAMUEL JEBARAJ**

## STORY FOR THE MONTH

Christian Friedrich Schwartz ***(1726-1798) -*** "Apostle to South India"



Life

Christian Friedrich Schwartz was born in Prussia (i.e., contemporary Poland) in 1726. Ordained in Copenhagen in 1749, he arrived in India in 1750 as a Lutheran missionary. He worked in Tranquebar, Trichinopoly, and Tanjore, India, for forty-eight consecutive years without returning to his native Prussia. While in India, Schwartz learned Tamil, Telugu, Sanskrit, Persian, Hindustani, Marathi, and Portuguese, and he assisted in the translation of the Bible into Tamil.

Lutheran missionary

Not the first Lutheran missionary to India, Schwartz benefited from the work of numerous missionaries including two eminent German predecessors: Bartholomäus Ziegenbalg (1683-1719) and Heinrich Plütschau (1678-1747). Both of these missionaries came from the Pietist tradition at the University of Halle, where Schwartz had studied theology, Hebrew, Greek, Latin, and various European languages. Acknowledging his own awareness of and debt to Ziegenbalg's example, William Carey said, "In 1706, the king of Denmark sent a Mr. Ziegenbalg, and some others to Tranquebar, on the Coromandel coast in the East-Indies, who were useful to the natives, so that many of the heathens were turned to the Lord" (An Enquiry into the Obligations of Christians to Use Means for the Conversion of the Heathens, p. 36). Schwartz's indirect influence on Carey occurred through the administrative protection of Carey by Colonel Bie, the Danish governor of Serampore. Prior to Carey's arrival in India, Bie had been a disciple of Schwartz. When Schwartz arrived in south India, the Tamil-speaking Christian community established by Ziegenbalg and others exceeded seventeen hundred persons.

Along with his untiring zeal as an evangelist and his deep understanding of Indian character, Schwartz displayed a saintly disposition and integrity that go far to account for his extraordinary influence. It has been rightly said that "he retrieved the character of Europeans from imputations of general depravity." His ecumenical spirit, which led him to accept an appointment as chaplain to the British community in Tiruchirapalli, was another important factor. But he never neglected his duties as a missionary to non-Christians or abandoned his loyalty as a Lutheran.

Originally sponsored by the Danish Missionary Society in Copenhagen, Schwartz landed in 1750 at the Danish settlement of Tranquebar on the Coromandel (i.e., southeast) coast of India (Tranquebar is known now as Tarangambädi in the Tamil Nadu area of India). He later served as a chaplain-missionary to the British community in India, and beginning in 1767, he was sponsored by the Anglican Society for the Promoting Christian Knowledge, London. In 1768, the East India Company appointed Schwartz as a chaplain in Trichonopoly. Ten years later in 1778, Schwartz moved to Tanjore where he lived the rest of his life. During his service with the British, Schwartz was known as a peacemaker (i.e., diplomat) during times of war caused by the East India Company's aggressive policies in India. Schwartz's linguistic abilities became legendary as he related easily among Germans, English, Portuguese, and many different Indian peoples. He endeared himself to the Indians as he established many schools for native Indians and orphaned Indian children.

Involvement in politics

Another remarkable aspect of Schwartz's ministry was his involvement in politics. After he had moved to the town of Tanjore, he quickly gained the confidence of the Hindu rajah, who on his deathbed appointed Schwartz guardian and trustee of his young heir. Although Schwartz declined, he later assisted the young prince. He also tried to be of use to the British, who on one occasion sent him as a special envoy of peace to Haider Ali, the despot of Mysore. Schwartz returned with respect for the Muslim ruler but complained of the insincerity and avarice of the British.

In 1769, he secured the friendship of the king Raja Tuljaji, who, although he never converted to Christianity, afforded him every countenance in his missionary labours. Shortly before his death he committed to Schwarz the education of his adopted son and successor Sarabhoji (Serfoji). Schwarz taught the prince, Prince Serfoji, and another slightly older pupil Vedanayagam using the gurukulam approach, where the teacher and the pupil live together.Raja Serfoji built a church to show his affection to Schwartz and it is still seen as a symbol of tolerance on the part of that great Mahratta ruler towards different religions.

Finally, Schwartz contributed significantly to the strengthening of an indigenous church in India. He made every effort to find and train young Indians for the ministry, often supporting them from his own pocket. He also encouraged the spontaneous expansion of small groups of Christians, such as those discovered during a visit to Palamcottah in 1778, the nucleus of what later became the large and vigorous Tinnevelly church. He was also responsible for the education of Vedanayagam, son of a catechist who trained under Schwartz; Vedanayagam was to become one of the greatest Tamil poets and hymn composers.

Death

In 1784 he established an English school in Thanjavur and this school is now known as St.Peter's Higher Secondary School. After twelve years in Tiruchirapalli he moved to Thanjavur, where he spent the remainder of his life. He died on 13 February 1798 just before Serfoji II ascended the throne. He was laid to rest in St.Peter's Church in Maharnonbuchavadi,Thanjavur. In his tomb there is a tombstone with a short memoir and an elegy in English written by Serfoji II.
The East India Company erected a monument honoring Schwartz in St. Mary's Church, Madras.

Legacy

Schwarz High School in Ramanathapuram has produced notable students, among them Dr. Abdul Kalam, the former President of India.

Schwartz won the admiration of Hindus, Muslims, and European settlers in India. In Britain, one historian of missions later referred to Schwartz as the apostle to South India after which Carey became the apostle to North India. Though estimates vary, by the time of his death, Schwartz was effective in gaining over six thousand Indian converts--both Hindus and Muslims--to Christianity.

## BIRTH OF A SONG
*(John Bowring – "In the Cross of Christ I Glory")*

Sir John Bowring (1792-1872) was a distinguished scholar, ranked by some as one of the great minds of his day in the English-speaking world. Among his gifts was his ability as a linguist, publishing translations of poetry from such varied languages as Russian, Batavian, Spanish, Polish, Serbian, Bohemian, Magyar, Czech and Hungarian.

Bowring was also a social progressive, advocating free trade, parliamentary reform, education for all and prison reforms, according to hymnologist Albert Bailey.

Few hymn writers have been as involved in politics. Knighted in 1854, Bowring helped develop commercial relationships on behalf of Great Britain, traveling to France, Switzerland, Italy, Germany, Syria and Siam (now Thailand).

Bowring also was twice a member of Parliament, a consul at Canton (in charge of trade in China) and a governor of Hong Kong. He was evidently relieved of his duties in Hong Kong because he "was full of conceit and without any very clear idea of political principles on a large scale." Mr. Bailey notes that some suggest that Bowring's policies and poor relationships with the Chinese contributed in part to the second Opium War (1856-1858)—a situation that led to the Chinese putting a price on his head.

Yet Bowring's political skills must have been respected in some quarters. Even after retirement in 1860, his public service continued as a commissioner to Italy and other diplomatic posts in Europe and Hawaii. With the exception of John Newton, the former slave trader turned Anglican priest who penned "Amazing Grace," we rarely find hymn writers with such a colorful and international lifestyle.

Despite a demanding political and diplomatic career, Bowring maintained an active avocation as a translator of poetry, composer of original poems and writer of essays on political and religious themes. Mr. Bailey notes that the "hymns that have lived were all written when he was about 30 years old, when his poetic interests were uppermost, and the idealism of youth made him the champion of the downtrodden and the underprivileged."

"In the cross of Christ I glory" (1825) was composed while the author was in his early thirties. Appearing in Hymns by John Bowring (1825), the theme and language suggests a much more mature poet. Late 19th-century hymnologist John Julian suggests that Galatians 6:14 provides the basis for this hymn: "Far be it for me to glory except in the cross of our Lord Jesus Christ" (KJV).

Isaac Watts used the same scriptural foundation for his famous "When I survey the wondrous cross," but the effect is much different. Watts' 18th-century hymn focuses on the crucified Christ and entreats the singer to view Christ on the cross. Bowring's 19th-century hymn has the expansive sense of history and time that typifies Romantic poetry of this era.

British hymnologist J.R. Watson notes that the "image [of a cross] is a fine one . . . it allows the reader to glimpse the Cross standing over a ruined universe: into the Cross are drawn all the emotions, the woes of life, the good moments of light and love, so that both are 'sanctified'."

This "sublime" cross (mentioned in the opening and closing stanzas) is a wonderful oxymoron, and as Mr. Watson points out, "an important word in the Romantic period . . . [making] this hymn a splendid example of hymnwriting in the age of Blake and Wordsworth."
It is one of the paradoxes of Christianity that an instrument of torture becomes a symbol of faith for all time where "All the light of sacred story/Gathers round its head sublime."

***In the Cross of Christ I Glory***

***1*** *In the cross of Christ I glory,*
*Tow'ring o'er the wrecks of time;*
*All the light of sacred story*
*Gathers round its head sublime.*
***2*** *When the woes of life o'ertake me,*
*Hopes deceive, and fears annoy,*
*Never shall the cross forsake me:*
*Lo! it glows with peace and joy.*
***3*** *When the sun of bliss is beaming*
*Light and love upon my way,*
*From the cross the radiance streaming*
*Adds new luster to the day.*
***4*** *Bane and blessing, pain and pleasure,*
*By the cross are sanctified;*
*Peace is there that knows no measure,*
*Joys that through all time abide.*



## ARTICLES FOR THE MONTH

## ‘கர்த்தர்மேல் கொண்டிருக்கும் ஊக்கமான தியானத்திற்கு இணையான உபதேசம் ஒன்றுமேயில்லை!

- சகரியா பூணன்

எபேசு சபையின் சரித்திரத்தை எண்ணிப் பாருங்கள். பவுல் 3 ஆண்டுகளாக அங்கு தங்கியிருந்து, அவர்களுக்குப் பிரசங்கித்தார் (அப் 20:31). அப்படியானால் பவுலின் உதடுகள் உதிர்த்த பல நூறு பிரசங்கங்களைக் கேட்டவர்கள்தான் இந்த எபேசியக் கிறிஸ்தவர்கள் என்று நாம் இதை அர்த்தப்படுத்தலாம். கர்த்தர்தாமே அவர்கள் மத்தியிலே நடப்பித்த அசாதாரணமான அற்புதங்களை அவர்கள் கண்டிருந்தனர் (அப் 9:14). மிகக் குறுகிய கால இடைவெளியான 2 வருடங்களுக்குள்ளாக அவர்கள் நடுவிலிருந்துதான், சுற்றியிருந்த ஆசியா மைனர் பகுதிகளிலெல்லாம் தேவனுடைய வார்த்தை பரவினது. அவர்கள் எழுப்புதலை அனுபவித்தவர்களாய் இருந்தனர் (19:10,19). அப்போஸ்தலர் காலத்திலிருந்த சபைகளிலேயே இவர்கள்தான் மிகவும் சிலாக்கியம் பெற்றவர்களாய் விளங்கினர். அச்சமயத்தில், ஆசியா மைனரிலேயே இந்த சபைதான் ஆவிக்குரியதாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. (பவுல், மற்ற சபைகளில் காணப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைச் சரி செய்ய வேண்டுமென்று அவர்களுக்குச் சொன்னது போல, எபேசியருக்கு எழுதிய நிருபத்திலே எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க வேண்டிய நிலை எழவில்லை என்பதிலிருந்து நாம் இதை அறிந்து கொள்ளலாம்).

ஆனால் அடுத்த தலைமுறையில் உருவாகும் புதிய தலைமையின் கீழ், சபையானது கேடான நிலைக்குச் சென்று விடும் என்று பவுல் எபேசுவை விட்டுக் கிளம்பும் முன்பாக மூப்பர்களை எச்சரித்தார். அவர்களுக்குள்ளே கொடிதான ஓநாய்கள் வரும் என்றும், அவர்களிலும் சிலர் எழும்பி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்றும், ஜனங்களைக் கர்த்தரிடத்திலே நடத்துவதற்குப் பதிலாக, தங்களிடத்திலே இழுத்துக் கொள்வார்கள் என்றும் அவர் அவர்களிடத்திலே சொன்னார் (அப் 20:29,30).

பவுல் அங்கிருந்த வரையிலும், எபேசு மந்தைக்குள்ளே எந்த ஓநாயும் நுழையத் துணியவில்லை. கர்த்தரிடமிருந்து ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெற்றிருந்த பவுல் ஓர் உண்மையுள்ள காவல்காரனாய் இருந்தார் (மாற்கு 13:34). அவர் அபிஷேகிக்கப்பட்டவராய் இருந்ததாலும், தேவனுக்குப் பயந்தவராய் இருந்ததாலும், தனது விருப்பங்களைத் தேடாமல், கர்த்தருடைய விருப்பங்களையே தேடினவராய் இருந்ததாலும் அவரால் அவ்வாறு இருக்க முடிந்தது. அதே சமயம், எபேசுப் பட்டணத்து மூப்பர்களின் ஆவிக்குரிய நிலை மோசமாக இருந்தது என்று அறிந்து கொள்ளக்கூடிய ஆவிக்குரிய பகுத்தறிதலும் அவருக்கு இருந்தது. எனவே அத்தகைய மூப்பர்களெல்லாம் சபையிலே தலைமைத்துவத்தை எடுக்கும் போது, காரியங்களெல்லாம் படிப்படியாக சீர்கேடு அடைந்துவிடும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

எபேசுவிலே உறுதியாய் என்ன நேரிடும் என்று பவுல் அந்த மூப்பர்களுக்குத் தீர்க்கதரிசனமாக எதையும் சொல்லவில்லை. இல்லை. அது ஓர் எச்சரிக்கைதான். மூப்பர்கள் தங்களைத்தாங்களே நியாயந்தீர்த்து, மனந்திரும்பியிருந்தால், அவர் முன்னறிவித்த பிரகாரமே காரியங்கள் நடந்திருந்திருக்காது.

நினிவேயின் அழிவைக் குறித்து யோனா ஒரு முறை தீர்க்கதரிசனம் உரைத்தான். ஆனால் நினிவே மக்கள் மனந்திரும்பியபடியால், யோனா முன்னறிவித்தது போல நடக்கவில்லை. அது போலவே எபேசு சபையும் பவுல் சொன்ன துர்பாக்கிய நிலையிலிருந்து தப்பியிருந்திருக்கக்கூடும்.

ஆனால் அந்தோ! புதிய தலைமுறையில் தோன்றிய எபேசு தலைவர்கள் பவுலின் எச்சரிக்கையை அசட்டை பண்ணி ஆண்டவரைவிட்டு வழிவிலகி விட்டார்கள். முதலாம் நூற்றாண்டின் இறுதிக்குள், மூன்றாம் தலைமுறையானது அதிகாரத்தில் அமர்ந்துவிட்டது. அதன்பின்பு, காரியங்கள் மோசமாகி விட்டன. அவர்களுடைய உபதேசங்கள் சரியானவையாகத்தான் இருந்தன; அவர்கள் கிறிஸ்தவ நடவடிக்கைகளில் வைராக்கியமாகத்தான் இருந்தனர். அநேகமாக அவர்கள் முழு இரவு கூட்டங்களையும், விசேஷித்தக் கூட்டங்களையும் இன்னும் நடத்திக் கொண்டுதான் இருந்தனர். ஆனால் கர்த்தர் அவர்களை ஒரு சபைக்குரிய அங்கீகாரத்திலிருந்து அகற்றிவிடுமளவுக்கு அவர்களது ஆவிக்குரிய தரமானது படுமோசமாக மாறியிருந்தது. அவர்கள் செய்த குற்றம் என்ன? அவர்கள் ஆண்டவர் மீதிருந்த தியானத்தை இழந்தவர்களாய் மாறிவிட்டிருந்தனர் (வெளி 2:4,5).

எபேசுவிலிருந்த சபையின் சரித்திரம் நமக்குப் போதிப்பது என்ன? இதுதான்: எந்த ஓர் உபதேசமும் நாம் ஆண்டவர் மீது வைக்கும் ஊக்கமான தியானத்திற்கு இணையான முக்கியத்தைப் பெற முடியாது என்பதுதான். ஆவிக்குரிய தன்மைக்கு ஒரேயொரு அடையாளம்தான் உண்டு. இயேசுவின் ஜீவன் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அதிகதிகமாக வெளிப்படுவதும், அந்த ஜீவனானது ஆண்டவரிடத்தில் தனிப்பட்டத் தியானத்தின் மூலமாகத்தான் பெருகுகின்றது என்பதும்தான் அந்த அடையாளமாகும்.

பவுல் ஒரு பக்திமானாய் இருந்தார். ஊக்கமான, உண்மையுள்ள அப்போஸ்தலனாய் இருந்த அவர், தன்னுடைய இறுதி மூச்சு வரை, கர்த்தராகிய இயேசுவின் மீது கொண்டிருந்த தியானத்தை இழந்துவிடவேயில்லை. அத்துடன் அவர் எல்லா இடங்களிலும் இருந்த எல்லா

விசுவாசிகளுக்கும், "கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி" (2 கொரி 11:3), சாத்தானானவன் எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்தி முயற்சிப்பான் என்று எச்சரிக்கை விடுத்தார்.

ஒருவன் கிறிஸ்துவுடன் உள்ள தனிப்பட்ட தியானத்தை இழந்துவிடும் அபாயமானது, "தண்ணீர் ஞானஸ்நானம்", "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்" ஆகிய உபதேசங்களில் காணப்படும் தவறுகளைக் காட்டிலும் பயங்கரமானதாகும். என்றாலும் அநேகர் இதைப் பற்றிய உணர்வற்றவர்களாகவே உள்ளனர்.

## *No Doctrine Is As Important As a Fervent Devotion to the Lord Himself*

***- Zac Poonen***

*Consider the history of the church at Ephesus. Paul stayed there for three years, preaching night and day (Acts 20:31). That means that the Ephesian Christians listened to many hundreds of sermons from Paul's lips. They had seen extraordinary miracles wrought by the Lord in their midst (Acts 19:11). From their midst, the word of God had spread to all the surrounding parts of Asia Minor during a short period of two years. They had experienced revival (Acts 19:10 19). They were the most privileged of all the churches in apostolic times. They were also undoubtedly the most spiritual church in Asia Minor at that time. (We can see that from Paul's letter to the Ephesians, where he had to correct no error in their midst, unlike the way he had to, in the other churches to which he wrote.)*

*But when Paul was leaving Ephesus, he warned the elders there that things would take a turn for the worse in the next generation, under the new leadership of the church. He told them that savage wolves would come into their midst and that from among their own midst would arise men speaking perverse things, drawing people after themselves, instead of drawing people to the Lord (Acts 20:29, 30).*

*As long as Paul was there, no wolf had dared to enter the flock at Ephesus. Paul was a faithful doorkeeper (See Mark 13:34), who had spiritual authority from the Lord, because he was anointed, because he feared God and because he sought the Lord's interests and not his own. But he also had enough spiritual discernment to know that the spiritual condition of the elders in Ephesus was bad - and so he knew that things would deteriorate once they took over the leadership of the church.*

*Paul did not give the elders a prophecy of what would definitely happen at Ephesus. No. It was only a warning. It did not have to happen like he predicted - if the elders would only judge themselves and repent.*

*Jonah once prophesied destruction on Nineveh. But it did not happen as he predicted, because the people of Nineveh repented. The church at Ephesus also could have escaped the fate that Paul predicted.*

*But alas, the new generation of leaders in Ephesus never took Paul's warning seriously and drifted away from the Lord.*

*By the end of the first century, the third generation had come into power. And then things became really bad. Their doctrines were still correct and they were zealous in Christian activity. They probably still had their all-night prayer meetings and their other special meetings. But their spiritual state was so bad that the Lord was about to remove His recognition of them as a church. What was their crime? They had lost their devotion to the Lord (Revelation 2:4,5).*

*What does the history of the church at Ephesus teach us? Just this - that no doctrine is as important as a fervent devotion to the Lord Himself. There is one- and only-one-mark of true spirituality - that the life of Jesus is manifested increasingly in our behaviour and this in turn can come only by an increasing personal devotion to the Lord Himself.*

*Paul was a godly man - a fervent and faithful apostle who was devoted to the Lord Jesus until the very end of his life. And he warned believers everywhere that Satan would try every means possible to turn them away from "simple devotion to Christ" (2 Corinthians 11:3).*

*Errors in doctrinal matters such as "baptism in water" and "baptism in the Holy Spirit", are not at all as dangerous as losing one's personal devotion to Christ. Yet many believers never seem to realise this.*



***Welcome articles for Mag.,***
***contactus@csitamilchurchpune.org***
***1page/250words***
***by 15th Mar'17***

## BIBLE QUIZ FOR THE MONTH

## *வேதாகமப் பகுதி : யோசுவா - 13 லிருந்து 24 வரை*

*1. யோசுவா இறந்த பொழுது அவருக்கு என்ன வயது?*

- ☐ *110 வயது*
- ☐ *120 வயது*
- ☐ *90 வயது*

*2. மனாசேயின் பாதிக்குலத்திற்கு,அவர்கள் குடும்பத்தின்படி மோசே அளித்த பகுதி எது?*

- ☐ *அர்னோன் பள்ளத்தாக்கு முழுதும்*
- ☐ *யாசேர் கிலயாதின் எல்லா நகர்களும்*
- ☐ *பாசானில் உள்ள 60 நகர்களும்*

*3. நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்,என்று கூறியது யார்?*

- ☐ *பினகாசு*
- ☐ *யோசுவா*
- ☐ *மோசே*

*4. இதோ, நான் 85 வயதானவன் என்று சொன்னது யார் ?*

- ☐ *காலேபு*
- ☐ *யோசுவா*
- ☐ *மனாசே*

*5. உங்களுள் ஒரே மனித எத்தனை பேரை வெல்வான் என்று யோசுவா தன இறுதி மொழியில் கூறினார் ?*

- ☐ *100 பேரை*
- ☐ *500 பேரை*
- ☐ *1000 பேரை*

*6. எபிரோனுக்கு முன்னாளில் வழங்கப்பட்ட இன்னொரு பெயர் யாது?*

- ☐ *கிரியத்து அர்பா*
- ☐ *எர்மோன்*
- ☐ *எஸ்போன்*

*7. ஆண்டவர் நம் நடுவில் உள்ளார் என்று இன்று நாங்கள் அறிந்துக் கொண்டோம். இது யாருடைய கூற்று ?*

- ☐ *எலயாசர்*
- ☐ *பினகாசு*
- ☐ *மனாசே*

*8. கிரியத்து சேபேரைத் தாக்கி அதை கைப்பற்றுபவருக்கு என்ன கொடுப்பென் என்று காலேபு கூறினார் ?*

- ☐ *ஒரு நிலம்*
- ☐ *அன்பளிப்பு*
- ☐ *தன் மகள் அக்சாவை*

*9. ஆண்டவர் இஸ்ரேல் வீட்டாருக்கு உரைத்த எல்லா நல்வாக்குகளும் தவறாமல் நிறைவேறின. சரியா? தவறா?*

- ☐ *சரி*
- ☐ *தவறு*
- ☐ -

*10. இன்றும் கானானியர் எப்ராயிம் நடுவில் அடிமைகளாக வேலைசெய்து வாழ்ந்து வருகின்றனர். இதை எந்த அதிகாரத்தில் வாசிக்கிறோம்?*

- ☐ *18 ம் அதிகாரம்*
- ☐ *13 ம் அதிகாரம்*
- ☐ *16 ம் அதிகாரம்*

*11. ஆனாக்கின் தந்தை யார்?*

- ☐ *அர்பா*
- ☐ *கோகாத்*
- ☐ *நப்தலி*

*12. கானானியர் அனைவரிடமும் ___________ தேர்கள் இருக்கின்றன*

- ☐ *மரத்தேர்*
- ☐ *இரும்பு தேர்*
- ☐ *வலிமையுள்ள தேர்*

*13. அடைக்கல நகர்கள் என்றால் என்ன ?*

- ☐ *அறியாமல் தவறுதலாக ஒருவரைக் கொன்றவர் இரத்தப்பழி வாங்குபவரிடமிருந்து தப்பி செல்லும் நகரம்.*
- ☐ *கொலையாளியை ஒப்படைக்கும் நகரம்*
- ☐ *கொலையாளிக்கான தீர்ப்புக் கூறுகிற நகரம்*

*14. சீட்டு போட்டு நப்தலிக்கு அளிக்கப்பட்ட பகுதி எத்தனை?*

- ☐ *22 நகர்கள்*
- ☐ *16 நகர்கள்*
- ☐ *19 நகர்கள்*

*15. எஞ்சிய நிலத்தை பங்கிட யோசுவா ஆண்டவர் முன்னிலையில் எந்த ஊரில் திருவுளச் சீட்டைப் போட்டார்?*

- ☐ சேபாவில்
- ☐ சீலோவில்
- ☐ எரிகோவில்